
குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
ஜென்னும்
திருவாசகமும்...
பாகம் 3
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# ஜென்னும் திருவாசகமும்

## பாகம் 3

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

இதனுள்ளே

1. வேண்டத்தக்கது அறிவோய் நீ!
2. புத்த தத்துவமும் திருவாசகமும் ஒரே வரியில்
3 .ஞானமடைந்த மனிதன்
4. மன்னரோடு உறவும் அஞ்சேன்
5. பேரின்பத்தில் திளைப்பேன்
6. ஞானம் பெற்ற பின்
7. ஞானம் பெறும் ஆர்வம்
8 .உறக்கத்திலிருந்து எழுந்தால் ஆன்மீக முன்னேற்றம்?
9. ஞானவாள் ஏந்துவோம்
10 அன்பு வழியில்
11. வேண்டேன் செல்வம்
12. மகிழ்ச்சியின் இரகசியம்
13. ஞானநிலைகள்
14. ஒரு ஆசை ஒரு பாடம்
15. பேரலைகள்
16. நானார் என் உள்ளமார்?
17. ஞானோதயத்தின் கதை
18. பழுத்த ஞானம்

19. அன்பின் செயல்
20. ஞானிகளின் சிறப்பு
21. எது அதிசியம்?
22. மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம்
23. ஞானம் என்றால்
24. நீர்மல்க தெள்ளேணம் கொட்டாமோ?
25. பிண நெஞ்சே!
26. யார் பெற முடியும்?
27. மன அமைதி பெற
28. மனோதிடம் வேண்டும்
29. அச்சத்திற்கு என்ன காரணம்?
30 .மனம் உருகி தொண்டு செய்வோம்!
31. புத்தர் எழுப்பிய கேள்விகள்
32. புத்தரின் மகாசமாதி

# 1. வேண்டத்தக்கது அறிவோய் நீ!

## (ஜென்னும் திருவாசகமும்)

ஞானி ஜுன்னாயிது தனது சீடர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தார்.

வழியில் எந்த கிராமமும் தென்படவில்லை கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெட்ட வெளிதான்.

தலைக்கு மேலே வெயில் சுட்டெரித்தது. எங்காவது சென்று இளைப்பாரலாம் என்றால் மரம் செடி, கொடிகள் எதையுமே அந்த வெளியில் காண முடியவில்லை.

தாகம் அவர்களுடைய தொண்டையை வறட்டியது. பசியோ அவர்களை தள்ளாட வைத்தது. மயக்கம் போட்டு விழாத குறையாக அவர்கள் மெதுவாக நடந்து கொண்டிருந்தனர்.

குடிக்க தண்ணீரும் கிடைக்காமல் உண்ண உணவும் கிடைக்காமல் வீடுகளற்ற குட்டி பாலைவனம் போன்ற பகுதியில் நாள் முழுவதும் அவர்கள் பயணம் செய்தனர்.

மெல்ல இருட்டத் தொடங்கியிருந்தது. வழியில் ஒரு விசாலமான மரம் தென்பட்டது. சீடர்களின் மனநிலை அறிந்த குரு அவர்களை இளைப்பாறச் சொன்னார். உடனே சீடர்கள் அடித்துப் போட்டது போல் சுருண்டு படுத்தனர்.

எப்போதும் உறங்குவதற்கு முன்பாக பிரார்தனை செய்வது குரு ஜுன்னாசியின் வழக்கம்.

அன்றைய நல்ல செயல்களுக்கு நன்மையும், கெட்ட செய்திகளுக்கு மன்னிப்பும் வேண்டுவது அந்த பிரார்த்தனையின் போது நடைபெறும்.

அன்றும் வழக்கம் போல மண்டியிட்டு பிரார்த்தனை செய்த குரு, " இறைவா, இன்று தாங்கள் அளித்த அனைத்திற்கும் மனப்பூர்வமான நன்றி என்றார்.

இதனைக் கேட்டதும் அருகில் படுத்திருந்த ஒரு சீடன், குருவே இறைவன் இன்று நமக்கு ஒன்றும் தரவில்லையே? என்றான் கவலையுடன்.

யாரப்பா சொன்னது? என்றார் குரு புன்னகையுடன்?. இறைவன் இன்று நமக்கு அருமையான பசியை அளித்தார். தாகத்தை உணரவைத்தார் அதற்காகத்தான் நான் அவருக்கு நன்றி செலுத்துகிறேன் என்று கூறினார்.

வேண்டத்தக்கது அறிவோய் நீ
 வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
 வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்.

யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உந்தன் விருப்பு அன்றே." (திருவாசகம் பா.501)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 2.புத்த தத்துவமும் திருவாசகமும் ஒரே வரியில் (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் தத்துவ ஞானியாகிய சுசுகி ரோசி என்பவர் புத்தமதத்தைப் பற்றிப் பல ஆண்டுகளாகச் சொற்பொழிவு செய்து வந்தார்.

அவருடைய சொற்பொழிவுக்குப் பிறகு கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடக்க இருந்தது.

நிறைய பேர் கலந்து கொண்டார்கள்.

ஆராய்ச்சி மாணவர் ஒருவர் "சுசுகி ரோசி அவர்களே! நீங்கள் நீண்ட நேரம் சொற்பொழிவு செய்தீர்கள். எனக்கு எதுவும் புரியவில்லை.


புத்த சமயக் கொள்கைகளைச் சுருக்கமாக ஒரே வரியில் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

அங்கிருந்த எல்லோரும் சிரித்தார்கள். அவர்களுடன் சேர்ந்து சுசுகி ரோசியும் சிரித்தார்.

"எல்லாம் மாறக் கூடியது" என்ற அவர் "அடுத்த கேள்வியைக் கேட்கலாம்" என்றார்.

“இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாழ் வாழ்க” (திருவாசகம் சிவபுராணம் வரி2)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.




# 3.ஞானமடைந்த மனிதன் (ஜென்னும் திருவாசகமும்)


சோகன் என்ற ஜென் குரு, தன் மாணாக்கர்களிடம், “ஏன் ஒரு ஞானமடைந்தவன் தன் சொந்தக் காலில் நின்று தன்னையே விளக்க முடியவில்லை” என்று கேட்டார்.

மேலும் அவர், “தன் நாக்கிலிருந்து வார்த்தைகள் வர வேண்டிய அவசியம் இல்லை” என்றார்.

## இறவா பேரின்பம் – திருவாசகம்

“பித்துஎன்னை ஏற்றும் பிறப்புஅறுக்கும் பேச்சுஅரிதாம்
மத்தமே ஆக்கும்வந்து என்மனத்தை – அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்துஇறவாப் பேரின்பம் வந்து.” (திருவாசகம் திருவெண்பா.622)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.




## 4. மன்னரோடு உறவும் அஞ்சேன்

### (ஜென்னும் திருவாசகமும்)

தளபதி ஒருவர் நிறைய வீரர்களுடன் ஒரு நாட்டிற்கு படையெடுத்தார்.

எல்லைப் பகுதியில் இருந்த ஒவ்வொரு ஊராகக் கைப்பற்றிக் கொண்டு வந்தார்.

விரர்களுடன் அவர் ஓர் ஊரை அடைந்தார்.

அவரை வணங்கிய வீரன் ஒருவன் “நம்மை எதிர்ப்பதற்கு இந்த ஊரில் யாரும் இல்லை. எல்லோரும் ஓடி விட்டார்கள். புத்தர் கோயிலில் ஜென் குரு ஒருவர் மட்டும் உள்ளார்? என்றான்.

எல்லோரும் ஓடி விட்டார்கள், இவர் மட்டும் ஏன் ஓடாமல் இங்கேயே இரு க்கிறார் என்பதை அறிய விரும்பினான் அவன்.

கோயிலுக்குள் சென்றான். அங்கிருந்த ஜென் குரு அவனை வணங்கவும் இல்லை. அங்கிருந்து செல்லவும் இல்லை.

தனக்கு அவர் அஞ்சவில்லை. தன்னை வணங்கவில்லை என்பதை அறிந்து கருங்கோபம் கொண்டான்.

வாளை உருவிய அவன் "முட்டாளே! யார் முன் நிற்கிறாய் என்பதை நீ அறியவில்லையா? கண் இமைப்பதற்கு முன் உன் உயிர் உடலை விட்டுப் பறந்து விடும்" என்று கண்கள் சிவக்கக் கத்தினான்.

எந்தப் பதற்றமும் அடையாத ஜென்குரு அமைதியாக "கண் இமைப்பதற்கு முன் ஓட்டம் பிடிக்கும் மனிதன்தான் என் முன் நிற்கிறான்" என்றார்.

ஞானியின் அஞ்சாமை

மன்னரோடு உறவும் அஞ்சேன் – திருவாசகம்

"மஞ்சு உலாம் உருமும் அஞ்சேன்;
மன்னரோடு உறவும் அஞ்சேன்;
நஞ்சமே அமுதம் ஆக்கும்
நம் பிரான் எம்பிரான் ஆய்,
செஞ்செவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீண்ட மாட்டாது,
அஞ்சுவார் அவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சுமாறே!" (திருவாசக. பா.524)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 5. பேரின்பத்தில் திளைப்பேன்

## (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் துறவி ஒருவர் தம் மூன்று சீடர்களையும் அழைத்தார்.

“நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்குப் பதில் சொல்ல வேண்டும்” என்றார்.

“குருவே! என்ன கேள்வி வேண்டுமானாலும் கேளுங்கள். பதில் சொல்லுகிறோம்” என்றார்கள் அவர்கள்.



"இன்னும் ஒரு மணி நேரம்தான் நீங்கள் வாழ்வீர்கள் அந்த ஒரு மணி நேரத்தில் என்ன செய்வீர்கள்? பதில் சொல்லு கிறோம்” என்று கேட்டார்.

முதலாம் சீடன் “இறை வழிபாட்டில் கழிப்பேன்” என்றான்.

“தியானத்தில் ஆழ்ந்து விடுவேன்” என்றான் இரண்டாம் சீடன்.

“பெற்றோர்களைக் கவனிப்பதில் செலவிடுவேன்'' என்றான் மூன்றாம் சீடன்.

“நீங்கள் மூவருமே புனிதமானதைச் சொன்னீர்கள்'' என்று பாராட்டினார் குரு.

அவர்களில் ஒருவன் “குருவே! உங்களுக்கு ஒரு மணி நேரம்தான் வாழ்வு என்றால் என்ன செய்வீர்கள்?'' என்ற கேட்டான்.

“எப்போதும் இருப்பது போல பேரின்பத்தில் இறைநிலையோடு இணைந்து இருப்பேன். என்னிடம் எந்த மாற்றமும் இருக்காது. வாழ்க்கையின் எல்லாக் கூறுகளும் புனிதமானவை'' என்றார் அவர்.

## இறவா பேரின்பம் – திருவாசகம்.


“பித்து என்னை ஏற்றும் பிறப்பு அறுக்கும் பேச்சுஅரியாம்
மத்தமே ஆக்கும்வந்து என்மனத்தை – அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்து இறவாப் பேரின்பம் வந்து.” (திருவாச.பா.622)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6. ஞானம் பெற்ற பின்
## (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் மாணவராகவும் புகழ் பெற்ற அறிஞராகவும் ஒருவர் இருந்தார்.

நூல்களைப் படிப்பதில் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.



தான் படித்த நூல்களை எல்லாம் சேர்த்து வைத்தார். அவரிடம் எண்ணற்ற நூல்கள் சேர்ந்தன.

திடீரென்று ஒருநாள் அவர் ஞானம் பெற்றார்.

ஞானம் பெற்றதும் அவர் செய்த செயல்கள் எல்லோர்க்கும் வியப்பைத் தந்தன.

தன்னிடம் இருந்த நூல்களை எல்லாம் எரித்து தீக்கரையாக்கி விட்டார்

.

“பொய்யா யினவெல்லாம்

போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி
மிளிர்கின்ற மெய்ச்சுடரே..”
(திருவாசகம்.சிவபுராணம் 36-40)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 7.ஞானம் பெறும் ஆர்வம்
### (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் ஞானி ஒருவரிடம் இளைஞன் ஒருவன் வந்தான்.

அவரைப் பணிவாக வணங்கிய அவன் “தங்களிடம் ஞானம் பெற வந்துள்ளேன். என்னை தங்கள் சீடனாக ஏற்று அருள வேண்டும்?” என்று வேண்டினான்.

அவனைத் தட்டிக் கழிக்க விரும்பினார் ஞானி.

“என் ஆசிரியர் எனக்கு கற்றுத் தந்தது இதுதான். பிறப்பையும் இறப்பையும் இயல்பாக எடுத்து கொள். இதுதான் ஞானம் என்றார். நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?” என்று கேட்டார்.

“புரிகிறது” என்றான் அவன்.

“அப்படியானால் ஞானம் பெற்று விட்டாய் நீ. மேலும் கற்க என்னிடம் ஒன்றும் இல்லை” என்றார் ஞானி.

“பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே நான் எதை ஏற்றுக் கொள்வது? எதை விடுவது? இதை உங்களிடம் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்” என்றான் அவன்.

அவனைத் தம் சீடனாக ஏற்றுக் கொண்டார் அவர்..

### பிறவிதனை அறமாற்றி - திருவாசகம்

“பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்புஎன்று இவை இரண்டும்
உறவினொடும் ஒழியச் சென்று உலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கி நான் கண்டேன”.
(திருவாசகம் பா.480)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 8.உறக்கத்திலிருந்து எழுந்தால் ஆன்மீக முன்னேற்றம்?

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு ஒருவரிடம் சீடன் ஒருவன் நீண்ட காலம் கல்வி கற்றான். அவரிடம் விடைபெற்ற அவன் அங்கிருந்து புறப்பட்டான்.

“நீ ஆன்மிக வழியில் எவ்வளவு முன்னேறிக் கொண்டிருக்கிறாய் என்பதை அறிய ஆவலாக உள்ளேன். ஆன்மிக முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் எனக்கு கடிதம் எழுது” என்றார் குரு.

“அப்படியே செய்கிறேன்” என்றான் அவன்.

முதல் மாதம் அவனிடம் இருந்து அவருக்குக் கடிதம் வந்தது. அதில் இறைவன் எல்லாப் பொருள்களிலும் உள்ளார் என்பதை அறிந்து கொண்டேன் என்று எழுதி இருந்தான்.

அதைப் படித்த அவர் ஏமாற்றம் அடைந்தார்.

அடுத்த கடிதத்தில் அவன் எல்லாப் பொருள்களும் ஒன்றுதான் என்ற உண்மையை அறிந்து கொண்டேன் என்று எழுதி இருந்தான்.

படித்த அவர் அந்தக் கடிதத்தைத் தூக்கி எறிந்தார்.

மூன்றாவது கடிதத்தில் அவன் யாரும் பிறப்பதும் இல்லை. இறப்பதும் இல்லை. நான் என்பதே இல்லை என்ற எழுதி இருந்தான்.

இதைப் படித்த அவர் சலிப்பு அடைந்தார்.

அதன் பிறகு அவனிடம் இருந்து கடிதம் எதுவும் வரவில்லை.

நான்கைந்து மாதங்கள் கழிந்தன.

கடிதம் எழுதுவது குறித்துச் சீடனுக்கு நினைவுபடுத்த நினைத்தார்.

உன் ஆன்மிக முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் கடிதம் எழுதுவதாகச் சொன்னாய் ஆறு மாதமாக எந்தக் கடிதமும் வரவில்லை என்று எழுதினார் அவர்.

அதற்குச் சீடன் பதில் எழுதி இருந்தான். அதில் ஆன்மிக முன்னேற்றமா? அதைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்? என்று இருந்தது.

இதைப் படித்த அவர் “கடவுளே! என் சீடன் ஆன்மிக முன்னேற்றத்தில் உயர்ந்த நிலையை அடைந்து விட்டான்” என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னார்.

## தன்னையறிந்து முழுமைபெற வாரீர்! – திருவாசகம்

“மாலறியா_நான்முகனும்_காணா_மலையினை_நாம்
போலறிவோம்_என்றுள்ள_பொக்கங்களே_பேசும்
பாலூறு_தேன்வாய்ப்_படிறீ_கடைதிறவாய்
ஞாலமே_விண்ணே_பிறவே_அறிவறியான்
கோலமும்_நம்மை_ஆட்கொண்டருளிக்_கோதாட்டும்
சீலமும்_பாடிச்_சிவனே_சிவனேயென்று
ஓலம்_இடினும்_உணராய்_உணராய்காண்
ஏலக்குழலி_பரிசேலோர்_எம்பாவாய்“ (திருவாசகம் பா.480)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 9.ஞானவாள் ஏந்துவோம்
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜப்பானில் ஒரு சிறு கிராமம் அது. அங்கு வசித்து வந்த மக்களுக்கு பெரும் தொல்லையாய் இருந்தார்கள் ஒன்பது திருடர்கள்

இவர்களை அடக்கி, தங்களைக் காக்க பக்கத்து நகரில் வாள் வீச்சில் புகழ் பெற்றிருந்த ஜென் குரு ஒருவரை அழைத்து வந்தனர்.

கிராமதிற்கு வந்த குரு அங்கிருந்த உணவகம் ஒன்றிற்கு சென்று சாப்பிடுவதற்காக ஒரு கிண்ணத்தில் அரிசி சாதம் எடுத்து வரச் சொன்னார்.
தன்னுடைய இருக்கையில் அமர்ந்தவர் இடையிலிருந்த வாளை உருவி தனக்கு எதிரில் வைத்து விட்டு, கிண்ணத்தில் வந்த சோற்றினை வெட்டுக் குச்சியால் (சாப்ஸ்டிக்) சாப்பிட ஆரம்பித்தார்.

விஷயம் அறிந்த ஒன்பது திருடர்களும் ஜென் ஆசிரியர் சாப்பிடும் உணவகத்திற்கு வந்து யாருக்கும் தெரியாமல் பின்புறம் மறைந்திருந்து நோட்டமிட்டனர். குருவுக்கு அது தெரிந்து விட்டது.

அப்போது அவர் தலைக்கு மேல் ஈக்கள் பறந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு முறையும் ஜென் குரு தன்னுடைய சாப்ஸ்டிக்கினை உயர்த்தி மேலே பறந்து கொண்டிருந்த ஈயினை அடித்தார்.

பார்க்காமலே, ஒவ்வொரு முறையும் ஒரு ஈ செத்து விழுந்தது. ஒரு முறை கூட குறி தவறவே இல்லை.

ஒன்பது முறை, ஒன்பது ஈக்களை மிகத் துல்லியமாக அடித்துக் கொன்றார்.

பின்பு திரும்பிப் பார்த்தார்.

மறைந்திருந்த கொள்ளைக் கூட்டத் திருடர்கள் காணாமல் போயிருந்தனர்.

அன்றைக்குச் சென்றவர்கள்தான் அதன் பிறகு அந்தக் கிராமத்தின் பக்கமே அவர்களை யாரும் பார்க்கவில்லை.

## ஞானவாள் – திருவாசகம்.

"ஞானவாள் ஏந்தும்ஜயர் நாதப் பறைஅறைமின்
மாமனமா ஏறும்ஜயர் மதிவெண் குடைகளவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே."
(திருவாசகம் பா.615)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம்.

ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
ஜென்னும்
திருவாசகமும்...
பாகம் 2
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# 10.அன்பு வழியில்

((ஜென்னும் திருவாசகமும்)

ஒரு ஜென் துறவியைக் காண ஒருவர் அவரது மடாலயத்திற்குச் சென்றார்.

அப்போது குரு அவரிடம், "ஏற்கனவே நாம் சந்தித்திருப்பது போல் இருக்கிறது. சந்தித்துள்ளோமா?" என்று கேட்டார்.

அதற்கு அவர் "ஆம், சந்தித்துள்ளோம்" என்று கூறினார்.

"அப்படியா?" என்று சொன்னப்படியே, அவரிடம் "டீ சாப்பிட போலாமா?" என்று குரு கேட்டார்.

பின்னர் மற்றொருவரும் குருவைப் பார்க்க வந்தார்.

அவரிடமும் குரு "ஏற்கனவே நாம் சந்தித்திருப்பது போல் இருக்கிறது. சந்தித்துள்ளோமா?" என்று கேட்டார்.

அதற்கு அவர் "இல்லை" என்று கூறினார்.

"அப்படியா?" என்று சொன்னப்படியே, அவரையும் குரு "டீ சாப்பிட போலாமா?" என்று கேட்டார்.

இக் கதையிலிருந்து, எப்போதும் அனைவரையும் ஒரே மாதிரி தான் நடத்த வேண்டும் என்பது புரிகிறது.

## அன்பு வழி – திருவாசகம்

"அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!
 அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்

புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே!” (திருவாசகம் பா.538)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 11. வேண்டேன் செல்வம் (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் குரு ஒருவர் தன்னுடைய சீடர்களுக்குக் கூறிய திபெத்திய நாடோடிக் கதை இது.

ஒரு கிராமத்தில் இரண்டு சகோதரர்கள் வசித்து வந்தனர்.

அண்ணனிடம் 99 பசுக்கள் இருந்தன. தம்பியிடம் ஒரே ஒரு பசு இருந்தது.

இருந்த ஒரு பசுவில் பால் கறந்து வீட்டில் உள்ள அனைவரின் தேவைக்கு எடுத்தது போக மீதியிருந்த பாலை அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு விற்று அதில் வரும் பணத்தை மற்ற தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வான்.

கொஞ்சமாக நிலமும் இருந்தது. அதில் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தான். பயிர்கள் செழித்து வளர்ந்தன.

அதைக் கொண்டு தன் வாழ்வை மிகவும் நிம்மதியாக, மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான்.

ஆனால் 99 பசுக்கள் வைத்திருந்த அண்ணனோ மகிழ்ச்சியாக இல்லை. இன்னும் ஒரே ஒரு பசு வாங்கி விட்டால் நூறு பசுவாகி விடும் என்ற நினைப்போடு அலைந்து திரிந்தான்.

ஒருநாள் அண்ணனைப் பார்ப்பதற்காகத் தம்பி வந்தான்.

“தம்பி உன்னிடம் இருக்கும் ஒரு பசுவும் தொலைந்து போய்விட்டால் என்ன செய்வாய்?” என்று கேட்டான்.

“கொஞ்சநாள் கஷ்டமாக இருக்கும், அப்புறம் என்ன செய்வது? அதை மறந்துவிட்டு மற்ற வேலைகளைப் பார்க்க வேண்டியதுதான். அது ஒன்றும் பெரிய இழப்பாகத் தெரியாது என்று இயல்பாகச் சொன்னான் தம்பி.

உன்னிடம் இருப்பதே அது ஒன்றுதான் என்பதால் அது உனக்குப் பெரிய இழப்பாகத் தெரியாது. என்னைப் பார் 99 பசுக்களை வைத்துக் கொண்டு அதை நூறாக்குவதற்காக அலைந்து கொண்டிருக்கிறேன்” என்று மன ஆதங்கத்தோடு சொன்னான் அண்ணன்.

“வேணும்ணா நீ என்னிடம் இருக்கும் ஒரு பசுவை வைத்துக் கொள்” என்று உடனே சொன்னான் தம்பி.

## வேண்டேன் வேண்டேன் - திருவாசகம்

வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்புச்சிவம்
வேண்டார் தமைநாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம் போகேன் இனிப்
புறம் போகேன் இனிப்புறம்போல் ஒட்டேனே. (திருவாசகம் பா.512)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 12. மகிழ்ச்சியின் இரகசியம்

## (ஜென்னும் திருவாசகமும்)

அரண்மனை போன்ற பெரிய மாளிகையில் ஜென் ஞானி ஒருவர் தங்கி இருந்தார். அவரிடம் அறிவுரை கேட்பதற்காக நாள்தோறும் நிறைய பேர் வருவார்கள்.

அன்றும் நிறைய பேர் வந்திருந்தார்கள். அவர்களில் இளைஞன் ஒருவனும் இருந்தான்.

ஞானியை வணங்கிய அவன் "மகிழ்ச்சியின் இரகசியத்தை எனக்குச் சொல்லித் தர வேண்டும்" என்றான்.

சிறிய கிண்ணம் ஒன்றை எடுத்தார் அவர். அதில் வழிய வழிய எண்ணெய் ஊற்றி அவனிடம் தந்தார்.

"இந்தக் கிண்ணத்துடன் நீ மாளிகை முழுவதையும் சுற்றிவிட்டு வா. ஒரு சொட்டு எண்ணெயும் சிந்தக் கூடாது" என்றார்.

எண்ணெய்க் கிண்ணத்தைக் கையில் பிடித்தபடி கவனமாகச் சென்றான் அவன். மாளிகை முழுவதையும் சுற்றிவிட்டு அவரிடம் திரும்பினான்.

"மாளிகை முழுவதையும் பார்த்து விட்டேன். ஒரு சொட்டு எண்ணெ யும் சிந்த வில்லை" என்றான் அவன்.

"கலைக்கூடத்தில் தொங்கும் அழகிய பாரசீக விளக்குகளைப் பார்த்தாயா? அவை எப்படி இருந்தன?" என்று கேட்டார் அவர்.

“விளக்குகளைப் பார்த்தேன். அவற்றை நன்றாகக் கவனிக்கவில்லை” என்றான் அவன்.

“அந்தக் கூடத்தில் நிறைய ஓவியங்கள் இருந்தன. எந்த ஓவியம் உன்னைக் கவர்ந்தது?” என்று கேட்டார் துறவி.

“ஓவியங்கள் இருப்பதைப் பார்த்தேன். அவற்றை நன்றாகக் கவனிக்கவில்லை” என்றான் அவன்.

இப்படியே அவர் எதைக் கேட்டாலும் நன்றாகப் பார்க்கவில்லை என்று பதில் சொன்னான் அவன்.

“இந்த மாளிகையைச் சுற்றிப் பார்க்கவில்லையா? என்ன கேட்டாலும் நன்றாகப் பார்க்கவில்லை என்றே பதில் சொல்கிறாய்” என்று கேட்டார் அவர்.

“கிண்ணத்தில் உள்ள எண்ணெய் சிந்தக் கூடாது என்பதில் கவனமாக இருந்தேன். அதனால் மாளிகையை நன்றாகப் பார்க்கவில்லை” என்றான் அவன்.

“அப்போது அதே எண்ணெய்க் கிண்ணத்துடன் செல். மாளிகையை நன்றாகச் சுற்றிப் பார்த்துவிட்டு வா. ஒவ்வொரு இடத்தைப் பற்றியும் விசாரிப்பேன்” என்றார் துறவி.

திரும்பிய அவன் மாளிகையின் அழகை அவரிடம் வருணித்தான்.

கிண்ணத்தை அவனிடம் வாங்கிய அவர் வழிய வழிய எண்ணெய் ஊற்றித் தந்தேன். “எண்ணெய் குறைகிறதே” என்று கேட்டார்.

“மாளிகையின் அழகைப் பார்ப்பதில் கவனமாக இருந்தேன். எண்ணெய் சிந்தியதைக் கவனிக்கவில்லை” என்றான்.

“உலகத்தில் நடக்கும் எல்லாவற்றையும் நாம் ஆர்வத்துடன் கவனிக்க வேண்டும். அதே சமயம் கிண் ணத்தில் உள்ள எண்ணெய்

ஒரு சொட்டும் சிந்தக் கூடாது என்றார், இதுதான் மகிழ்ச்சியின் இரகசியம்" என்றார் துறவி.

மெய்யுணர்வினால் நுகரப்படும் அழிவில்லாத இன்பத்தின் முடிந்த எல்லை – திருவாசகம்

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்க்கொள் தாள்இணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ எளியை ஆகிவந்து
ஒளிசெய் மானுட மாக நோக்கியும்
கீறி லாதநெஞ்சு உடைய நாயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே" (திருவாக.பா.95)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 13. ஞானநிலைகள்

(ஜென்னும் திருவாசகமும்)

புகழ் பெற்ற புத்த மடம் ஒன்றிற்கு அந்நாட்டு அரசர் வந்தார்.

அங்கிருந்த ஜென் துறவி அவரை வரவேற்றார்.

"குருவே! எனக்கு ஒரு சந்தேகம்" என்றான் அரசன்.

"என்ன சந்தேகம்? கேளுங்கள்" என்றார் ஜென் குரு.

"ஞானம் பெற்ற ஒருவன் இறந்த பிறகு என்ன ஆவான்?" என்று கேட்டான்.

"அரசே! எனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார் ஜென் குரு.

"நீங்கள் ஞானம் பெற்றவர்தாமே" என்றான் அவன்.

“நான் இன்னும் சாகவில்லையே” என்றார் குரு.

## செற்றிலேன் இன்னுந் திரிதருகின்றேன் – திருவாசகம்

“புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
   உண்டி யாய் அண்ட வாணரும் பிறரும்
மற்றி யாரும் நின்மலரடி காணா
   மன்ன என்னைஓர் வார்த்தையுள் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனமிக உருகேன்
   பரிகிலேன் பரியாவுடல் தன்னைச்
செற்றிலேன் இன்னுந் திரிதருகின்றேன்
   திருப்பெருந்துறை மேவிய சிவனே.” (திருவாச.பா.399)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 14. ஒரு ஆசை ஒரு பாடம்
### (ஜென்னும் திருவாசகமும்)

நதிக்கரையில் ஒரு ஜென் குருவும் அவரின் சீடர்களும் முகாம் இட்டிருந்தார்கள்.

அருகில் உள்ள கிராமங்களுக்குச் சென்று பிச்சையெடுத்து உண்பார்கள். தினந்தோறும் ஏதாவது ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வார்கள்.

அந்த வழியாகச் சென்ற அரசன் அவர்களைப் பார்த்தான்.

“நாளை எனது அரண்மனையில் ஒரு விஷேசம். நான் உங்கள் அனைவருக்கும் அறுசுவை விருந்து கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். அனைவரும் சரியாகப் பத்து மணிக்கு வந்து விடுங்கள்” என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

சீடர்களுக்கு ஒரே குஷி.

நாம் இவ்வளவு நாட்கள் மக்களிடம் பிச்சையெடுத்துச் சாப்பிட்டோம். தற்போது அரணமனை விருந்துக்கு அழைப்பு வந்திருக்கிறது.

என்னென்ன சுவை மிகுந்த பதார்த்தங்களை விருந்தில் பரிமாறுவார்களோ? என்று மனதிற்குள் கற்பனை செய்தபடி சந்தோஷமாகத் தூங்கச் சென்றார்கள்.

அடுத்தநாள் காலையில் ஒன்பது மணிக்கே சுறுசுறுப்பாக தயாராகி விட்டார்கள்.

வழக்கம் போல் தங்கள் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு அரண்மனையை நோக்கிச் சென்றார்கள்.

அரண்மனை பிரதான வாயில் அருகே அவர்கள் சென்ற போது, ஓடோடி வந்த ஒரு ஊழியன் அரசர் அவசர வேலையாக வெளியூருக்கப் போய்விட்டதால் விருந்து இன்று நடைபெறவில்லை என்று தகவல் தெரிவித்தான்.

"அப்படியா மிகவும் நல்லது.  மிக்க நன்றி" என்று கூறிய குரு திரும்பினார்.

"சாப்பாட்டுக்கு இப்ப என்ன செய்வது குருவே?" என்று பரிதாபமாகக் கேட்டார்கள் சீடர்கள்.

"இத்தனை வருடங்களாக எப்படிச் சாப்பிட்டோம் என்பது உங்களுக்கு அதற்குள் மறந்து விட்டதா?  ஒரே ஒரு ஆசை எப்படியெல்லாம் வி ளையாட்டுக் காட்டுகிறது பார்த்தீர்களா? என்று கூறினார்.

"இன்றைய பாடத்தை நல்ல முறையில் நாம் அனைவரும் கற்றுக் கொண்டோம்" என்ற திருப்தியில் வழக்கம் போல பிச்சைக்குக் கிளம்பினார்கள் சீடர்கள்.

மொய்ப்பால் நரம்பு கயிறாக
    மூளை என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக்கு  இருக்க கில்லேன்
    கூவிக்கொள்ளாய் கோவேயோ

எப்பா லவர்க்கும் அப்பா
    லாம் என் ஆர் அமுதேயோ
அப்பா காண ஆசைப்
    பட்டேன் கண்டாய் அம்மானே.” (திருவாக.பா.419)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 15. பேரலைகள்

## ஜென்னும் திருவாசகமும்)

“பேரலைகள்” என்று அழைக்கப்படும் ஒ-நாமி மெய்ஜி வருடத்தில் வாழ்ந்த மல்யுத்த வீரன்.

அவனுக்கு மல்யுத்தம் பற்றிய அனைத்து நுணுக்கங்களும் அத்துப்படி. நல்ல திடகாத்திரமான உடல்வாகு பெற்றவன்.

தான் பயின்ற மல்யுத்தக் கழகத்தில் நடக்கும் போட்டியில் தனது ஆசிரியரையும் வெல்லும் ஆற்றல் பெற்றவன்.

ஆனால், மக்களின் மத்தியில் நடைபெறம் உண்மையான போட்டியில் அவனுடன் படித்தவர்களும், அவன் சொல்லிக் கொடுத்த அடிப்பொடிகளும் கூட எளிதாக அவனைத் தூக்கிப் போட்டு பந்தாடினார்கள்.

ஹாகஜீ என்ற ஜென் ஆசரியர் ஓரிடத்தில் இல்லாமல் எல்லா இடங்களுக்கும் சென்று பிறருக்கு ஜென் பற்றிய கருத்துகளையும். தியானமும் சொல்லிக் கொடுப்பவர்.

ஒ-நாமி ஹாகுஜீவை சென்று சந்தித்து தனது பிரச்சனையைக் கூறினான்.

“பேரலைகள் என்பது உனது பெயர்” என்று கூறிய ஆசிரியர், ஒ-நாமியைப் பார்த்து

“இன்று இரவு முழுவதும் இந்த மடத்திலேயே தங்கி இரு. இனி நீ ஒரு பயந்த மல்யுத்த வீரன் அல்ல. உன்னையே நீ கற்பனை செய்து கொள்.

அந்த அதிவேகமாக கரையை முட்டும் அலைகளைப் போல, பேரலைகள் உருவாகி பெரும் சப்தத்துடன் அதி வேகமாக வரும் போது. எதிரில் உள்ள அனைத்தையும் தவிடு பொடியாக்கும்.

அந்த பேரலைகளாக உன்னை மனதில் நினைத்து தியானம் செய்! நீ யாரும் வெல்ல முடியாத மல்யுத்த வீரனாக வருவாய்!” என்று அறிவுரை கூறிவிட்டு கிளம்பிவிட்டார்.

ஒ-நாமி தரையில் அமர்ந்து தானே அந்த அலைகளாக எண்ணி தியானம் செய்ய ஆரம்பித்தான்.

முதலில் பல்வேறு எண்ணங்களும் வந்து முட்டி மோதி அவனை அலைக் கழித்தது.

பின்பு கொஞ்சம் கொஞ்சமாக தன்னை, தன் மன எண்ணங்களை ஒருமுகப் படுத்தி, அலைகளாக நினைக்கத் தொடங்கினான்.

சிறுசிறு அலைகளாக நினைக்கத் தொடங்கியவன், நேரம் ஆகஆக அலைகளின் வேகமும் உயரமும் பெரிதாகிக் கொண்டே வருவதை உணர்ந்தான்.

அந்த அலைகைள் மடத்தின் உள்ளே இருந்த பூந்தொட்டிகளை வேகமாக தள்ளி கீழே விழ வைத்தன.

கொஞ்ச நேரத்தில் புத்த விக்ரகத்தையும் அந்த அலைகள் விட்டு வைக்கவில்லை.

காலை ஆவதற்குள் அந்த மடம் அலைகளின் நுரையும் சப்தமும் கொண்டு முழுவதுமாக பேரலைகளில் சிக்கி மூழ்கியது.

காலையில் வந்த ஜென் ஆசிரியர். ஒ-நாமி தியானம் செய்து கொண்டு இருப்பதைப் பார்த்தார்.

புன்னகையோடு மல்யுத்த வீரனின் தோலில் தட்டி “இனி எதுவும் உன்னை தடை செய்ய முடியாது. நீ அந்த அலையாகி விட்டாய். எதிரில் வரும் எதையும் யாரையும் எளிதில் அடித்து துவம்சம் செய்து விடுவாய்” என்றார்.

அன்றே ஒரு மல்யுத்த போட்டியில் கலந்து கொண்டு வென்றான். அதன் பிறகு ஜப்பானில் யாராலும் அவனை வெல்ல முடியவில்லை

“பூவார் சென்னி மன்னன் எம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து உணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப் பட்டு அன்பாய்
ஆட்பட்டீர் வந்து ஒருப் படுமின்
போவோம் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே.” (திருவாசக.பா.605)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 16.நானார்என் உள்ளமார்?

(ஜென்னும் திருவாசகமும்)

புத்த துறவி நாகசேன் அவர்களின் மடத்திற்கு அந்நாட்டு அரசன் வந்தான்.

துறவியை வணங்கிய அவன் “நான் என்பது என்ன? விளக்கமாகச் சொல்லுங்கள்” என்று கேட்டான்.

அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாத அவர் “அரசே! நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?” என்று கேட்டார்.

தேரில் வந்தேன். தேர் வெளியே நிற்கிறது” என்றான் அவன்.

“அரசே! தேர் எப்படி இருக்கும்? விளக்கமாகச் சொல்லுங்கள்.”

“தேருக்கு இரண்டு சக்கரங்கள் உள்ளன. சக்கரங்கள் சுழலக் கடையாணிகள் உள்ளன. அமர்வதற்குப் பீடம் உள்ளது. கொடி மரம் உள்ளது. தேரை இழுத்துச் செல்லக் குதிரைகள் உள்ளன.”

“அரசே! நீங்கள் சொன்ன பொருள்கள் அனைத்தும் ஒரே பொருளா? தனித்தனிப் பொருள்களா?”

“அவை தனித்தனிப் பொருள்கள்தாம்.”

“அரசே! நீங்கள் சக்கரங்கள் உள்ளன. கடையாணிகள் உள்ளன. பீடம் உள்ளது. கொடி மரம் உள்ளது. குதிரைகள் உள்ளன என்கிறீர்கள். அப்படியானால் தேர் எங்கே உள்ளது?” என்று கேட்டார்.

என்ன பதில் சொல்வது என்று அறியாமல் திகைத்தான் அரசன்.

“அரசே! உங்கள் தேரைப் போன்றதுதான் “நான்” என்ற உணர்வும். அதை உணர முடியுமே தவிர விளக்கிச் சொல்ல முடியாது” என்றார் அவர்.

## நான் யார்? என்பது என்ன? திருவாசகம்.

“நானார்என் உள்ளமார் ஞானங்க ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி

ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ." (திருவாசகம் பா.216)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.




# 17.ஞானோதயத்தின் கதை

## (ஜென்னும் திருவாசகமும்)

இளம் துறவியான சியூனோ நீண்ட காலமாக எங்காகுவைச் சேர்ந்த புக்கோ என்ற ஜென் குருவிடம் ஜென் போதனைகளைக் கற்றுக் கொண்டிருந்தார்.

ஆனால் அவருக்கு தியானத்தின் பலன் மட்டும் கை கூடாமலேயே இருந்து வந்தது. இந்த நிலையில் ஒரு இரவில் அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

ஒரு மூங்கிலால் இணைக்கப்பட்டிருந்த பழைய வாளி ஒன்றை அவர் தூக்கிக் கொண்டு சென்றார்.

அப்போது திடீரென மூங்கில் உடைந்து வாளியின் கீழ்ப்புறம் அறுந்து விழுந்தது. அப்போதுதான் சியூனோவுக்கு ஞானோதயம் பிறந்தது.

அதை ஒரு கவிதையில் அவர் வடித்துக் கூறினார்.

நான் அந்த பழைய வாளியை காக்க முயற்சித்தேன்

ஆனால் மூங்கில் பலவீனமாக இருந்ததால் அது உடைந்தது.
அதனால் வாளியின் கீழ்ப் பகுதியும் உடைந்து போனது.
வாளியில் தண்ணீர் இல்லை

தண்ணீரில் தெரிந்த நிலவையும் காணவில்லை.

"கேட்டாரும் அறியாதான் கேடுஒன்று இல்லான்
கிளைஇலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்து இருப்ப ஞாலத்து உள்ளே
நாயினுக்குத் தவிசுஇட்டு நாயினேற்கே
காட்டதன எல்லாம் காட்டிப் பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து ஆட்கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே"

(திருவாசகம் பா.32)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 18. பழுத்த ஞானம்

(ஜென்னும் திருவாசகமும்)

டோசூய் அவர் காலத்தில் வாழ்ந்த சிறந்த ஜென் ஆசிரியர்.

அவர் பல இடங்களுக்கு சென்று, சில மடங்களில் தங்கியிருந்தும் ஜென் புத்த மதத்தினைப் பற்றியும், தியானம் பற்றியும் போதித்து வந்தார்.

கடைசியாக இருந்த மடத்தில் புத்த பிட்சுவாக மாறுவதற்கும், ஜென் பற்றி படிப்பதற்கும் பல சீடர்கள் இருந்தனர்.

ஒருநாள் அவர்கள் எல்லோரையும் அழைத்து தான் கற்றுக் கொடுப்பதிலிருந்து விலகுவதாகவும், அனைவரும் இங்கிருந்து கலைந்து வேற எங்காவது அவரவர் விருப்பப்படி செல்லலாம் என்று கூறி விட்டு கிளம்பினார்.

அன்றிலிருந்து எவராலும் டோசூய் எங்கு இருக்கிறார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை.

மூன்று வருடங்களுக்குப் பிறகு சீடன் ஒருவன் ஜப்பானின் பழைய தலைநகரம் கியோடோ வழியாக சென்று கொண்டிருந்த போது ஒரு பாலத்தில் அடியில் தங்கி இருந்த பிச்சைக் காரர்களில் ஒருவராக இருந்த டோசூவைப் பார்த்தான்.

டோசூயிடம் சென்று தனக்கு ஜென் பற்றி கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நச்சரித்தான்.

“நான் இருப்பது போல, நீ சில நாட்களாவது இங்கு இருக்க முடிந்தால் நான் கற்றுக் கொடுக்கிறேன்” என்றார் டோசூய்.

முன்னாள் சீடன் இன்னாள் பிச்சைக்காரனான டோசூனைப் போல தானும் கிழிந்த உடைகளை உடுத்திக் கொண்டு அவருடன் ஒரு நாள் கழித்தான்.

அடுத்த நாள் பிச்சைக்காரர்களில் ஒருவன் இறந்தான். டோசூயும் சீடனும் பிணத்தை நடு இரவில் எடுத்துச் சென்று, மலையின் ஓதுக்குப் புறமான பகுதியில் குழி தோண்டி புதைத்தனர்.

திரும்பி பாலத்திற்கு அடியில் வந்த டோசூய் நன்றாக அடித்துப் போட்டவர் போல தூங்கினார். ஆனால், சீடனால் ஒரு நிமிடம் கூட அந்த இடத்தில் தூங்க முடியவில்லை.

காலை விடிந்ததும் டோசூய் “இன்று நாம் பிச்சை எடுக்கத் தேவையில்லை. இறந்த நண்பன் கொஞ்சம் அங்கே விட்டு சென்றிருக்கிறான்” என்று கூறிவிட்டு, சீடனிடம் கொஞ்சம் கொடுத்து விட்டு மீதியைச் சாப்பிட்டு முடித்தார்.

சீடனால் ஒரு உருண்டை என்ன, ஒரு பருக்கை கூட சாப்பிட பிடிக்கவில்லை.

“நான் முன்பே சொன்னேன். உன்னால் முடியாது” என்ற டோசூய், “இங்கிருந்து கிளம்பு, என்னை மறுபடியும் தொந்தரவு செய்யாதே” என்று சொல்லி அவனை விரட்டி அடித்தார்.

பழுத்த ஞானம் – திருவாசகம்

“வான்கெட்டு மாருதம்மாய்ந்து அழல்நீர்மண்கெடினும்
தான்கெட்டல் இன்றிச் சலிப்புஅறியா தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ?”
(திருவாசகம் பா.252)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 19.அன்பின் செயல்

## (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு அழகிய மலையையின் அடிவாரத்தில் இருந்த சிறிய குடிசையில் ஜென் துறவி ரியோகன் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் இரவு திருடன் ஒருவன் குடிசையில நுழைந்து ஏதேனும் கிடைக்குமா என்று தேடி ஒன்றும் கிடைக்காமல் ஏமாந்தான்.

அந்த நேரத்தில் உள்ளே நுழைந்த ஜென் துறவி திருடனைப் பார்த்து "இவ்வளவு தூரம் என்னை பார்ப்பதற்காக வந்த நீ ஏமாந்து வெறுங்கையுடன் திரும்பக் கூடாது. என்னுடைய உடைகளை எடுத்துச் செல்!" என்று கூறினார்.



ஆச்சரியமும், குழப்பமும் அடைந்த திருடன் உடைகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து விரைவாக நழுவினான்.

உடைகள் அற்ற துறவி நிர்வாணமாய் உட்கார்ந்து தொலைவில் தெரிந்த அழகிய நிலவினைப் பார்த்து இரசித்தார்.

பின்பு "முட்டாள் நான்! இந்த அழகிய நிலவை திருடனிடம் கொடுத்து இருக்கலாம்" என்று எண்ணினார்.

## அன்பின் செயல் – திருவாசகம்

"அம்மைஎன்புறைந் துருகி நெக்குநெக் கேங்கி

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதஎன் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக் யே அப்பா! ஒப்பிலா மணியே!"
(திருவாசகம் போற்றித் திருஅகவல் 80-84)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 20. ஞானிகளின் சிறப்பு

## (ஜென்னும் திருவாசகமும்)

வயதில் முதிய ஒரு ஜென் குரு இருந்தார். அவருக்கு ஒரு கால் சற்றே ஊனம். அதனால் விந்தி விந்தித்தான் நடப்பார்.

வயதுதான் அதிகமாகியதே தவிர அவரைப் பார்த்தால் இளைஞன் போலவே இருப்பார். தன்னுடைய வேலைகள் அனைத்தையும் அவரே செய்து கொள்வார்.

ஒரு நாள் கடைவீதிக்கு அவர் காய்கறிகள் வாங்குவதற்காக சென்றார்.

அவருக்கு எதிரே ஒரு இளைஞன் எங்கோ பராக்குப் பார்த்தபடி வந்தான். அவர் மீது மோதி விட்டான். அவர் அப்படியேதான் நின்றார். அவன் கீழே விழுந்து கை, கால்களில் லேசான காயம் ஏற்பட்டது.

அவனுக்குக் காயம் ஏற்பட்ட எரிச்சலில், "பார்த்து வர மாட்டாயா? இப்படி வேகமாக வந்த என்மீது மோதிய உன்னை என்ன செய்வது? ஒரு கால் இப்படி இருக்கிறதே வீட்டிலேயே இருக்க மாட்டாமல் உன்னையெல்லாம் யார் கடைவீதிக்கு வரச் சொன்னது" என்று கோபமாகக் கத்தினான்.

ஜென் குரு புன்னகைத்தபடியே அவனைப் பார்த்தார்.

“மகனே எனக்குக் கால் ஊனமாக உள்ளது. அதனால் தான் நான் உன்மீது மோதிவிட்டேன். தவறு என் மீதுதான். அதற்காக நான் உன்னிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். என்னை மன்னித்து விடு.

அப்படியிலாமல் உன் மீதுதான் தவறு என்பதை நீ உணர்ந்தால் அதையே நினைத்து உன்னை வருத்திக் கொள்ளாதே. அது உனக்குத்தான் கெடுதல்.

உன் மனதில் வருத்தம் இருந்தால் அது உன் உடலையும் பாதிக்கும். எனவே இந்த சம்பவத்தை இப்போதே மறந்துவிடு” என்று கனிவாகக் கூறினார்.

அதைக் கேட்டுத் தன் தவறை உணர்ந்த அவன் அவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு தலைகுனிந்தபடி சென்றான்.

### ஞானிகளின் சிறப்பு –திருவாசகம்

“பெற்றி பிறர்க்குஅரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்து அருளித் தன்அடியார்
குற்றங்கள் நீக்கிக் குணம்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வு அறுப்பான் தொல்புகழே
பற்றிஇப் பாசத்தைப் பற்றுஅறநாம் பற்றுவான்
பற்றியயே பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்.”
(திருவாசகம் திருஅம்மானை பா.194)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 21.எது அதிசியம்?

(ஜென்னும் திருவாசகமும்)

ரயுமான் கோயிலில், பாங்கே என்ற ஜென் குரு போதனை செய்யும் பொழுது, “அன்பே புத்தர்” என்ற மந்திரத்தை பல தடவை மீண்டும் மீண்டும் சொல்லி குறைகளை நிவர்த்தி செய்வதாக நம்புகிறார்.

அந்த ஜென் குருவிடம் நிறைய சீடர்கள் இருப்பதைக் கண்டு சீன்சூ சந்நியாசி, அவரிடம் பொறாமை கொண்டார்.

அவரோடு வாதிட்டு, அவரைத் தோற்கடிக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

பாங்கே போதனை செய்து கொண்டு இருக்கும் பொழுது, ஒரு நாள் அந்த சந்நியாசி இடையில் புகுந்து சம்மந்தமில்லாமல் பேசி தொந்திரவு கொடுத்துக் கொண்டே இருந்தார்.

ஒரு கட்டத்தில் பாங்கு. தன் பிரசங்கத்தை நிறுத்தி விட்டு,.அவரை கேட்க நினைத்தார்.

அந்தச் சந்நியாசி, “எங்களுடைய மதப்பிரிவை ஏற்படுத்தியவர், ஆற்றின் ஒரு கரையில் நின்று கொண்டு ஒரு தூரிகையைக் கையில் ஏந்தி, அடுத்த கரையில் தன்னுடைய வேலையாள் ஒரு வெற்றுக் காகித்தைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தால்,

இவர் இங்கு இருந்தபடியே. தெய்விகப் பெயரான அமிதாவை, காற்றிலேயே எழுதி, அந்தப் பேப்பரில் விழும்படி செய்யும் அற்புத ஆற்றலைப் பெற்றவர்.

உங்களால் அதைப் போல அற்புதச் செயலைக் காட்ட முடியுமா?” என்று பெருமையாகப் பேசி. சவால் இட்டார்.

அதற்கு பாங்கே எளிமையாக, “ஒருக்கால் உங்களுடைய தலைவர் ஏதோ தந்திரம் செய்திருக்கலாம். ஆனால், ஜென்னில் அப்படி ஒன்றும் கிடையாது.”

என்னுடைய அற்புதம் என்னவென்றால், “எனக்குப் பசி எடுக்கும் பொழுது, உண்ண மட்டுமே செய்வேன். அதைப் போலத் தாகம்

எடுக்கும் பொழுது, நீரை அருந்தி தாகத்தை மட்டுமே தணிப்பேன். அவ்வளவுதான்" என்றார்.

### ஆட்கொண்ட அதிசியம்? – திருவசாகம்

"வைப்புமாடு என்றும் மாணிக்கத்து
ஒளிஎன்றும் மனத்திடை உருகாதே
செப்பு நேர்முறை மடவரலியர்
தங்கள் திறந்திடை நைவேனை
ஒப்பிலாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் திருப்பா தத்து
அப்பன் ஆண்டுதன் அடியரில்
கூட்டிய அதிசயம் கண்டோமே." (திருவாசகம் பா.428)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 22. மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம்
(ஜென்னும் திருவாசகமும்)

போதி தர்மர் யாரையும் தன்னுடைய சீடனாக ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒரு மலைப் பகுதியில் தனியே தங்கியிருந்து தியானம் செய்வது அவருடைய வழக்கம். பழக்கமாக இருந்தது.

அவர் இருக்கும் இடத்தைத் தேடிக் கொண்டு படித்த ஒரு இளம் துறவி "என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று வேண்டினார்.

அவரை அங்கிருந்து அனுப்பி விட வேண்டுமென்று போதி தர்மர் முயற்சித்த போதும் அவர் அங்கிருந்து போவதாக இல்லை.

“எனக்கு எப்படியாவது நீங்கள்தான் உதவ வேண்டும்”

“என்ன பிரச்சனை உனக்கு, நான் எப்படி உதவ முடியும்?”

“என் மனதில் அமைதியே இல்லை. நீங்கள்தான் அதை எப்படியாவது அமைதிப்படுத்த வேண்டும்”

“முதலில் உன்னுடைய மனது எங்கிருக்கிறது என்று காட்டு, அதைப் பிறகு அமைதிப்படுத்தலாம்”

சிறிது நேரம் யோசித்தபோதும் அவரால் மனதைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

“என்னால் மனதைக் கண்டுபிடிக்க முடியவில்லை”

“நல்லது. அப்படியென்றால் நான் உன்னுடைய மனதை ஏற்கனவே அமைதிப்படுத்தி விட்டேன் என்று அர்த்தம்” என்று போதிதர்மர் கூறிய அந்த விநாடியில் இளம் துறவிக்கு ஞானம் பிறந்தது.

அதன்பிறகு அவர் போதிதர்மரிடம் சீடராகச் சேரவேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று.

### மனம் அற்ற இடம் – திருவாசகம்.

“நாற்றத்தின் நேரியாய் சேயாய் தணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே” (திருவாசகம் சிவபுராணம் 44-45)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 23.ஞானம் என்றால்

## (ஜென்னும் திருவாசகமும்)

முழுமையான ஞானம் என்பது என்ன? என்று ஒரு அறிஞருக்கு சந்தேகம் வந்தது.

முதலில் ஒரு ஜென் துறவியைச் சந்தித்த அவர் தனது சந்தேகத்தைக் கேட்டார்.

அவரை மேலும் கீழுமாகப் பார்த்த துறவி, “இப்படி பளபளவென்று ஆடை அணிந்திருந்தால் உனக்கு எப்படி ஞானம் கிடைக்கும்?” என்று எதிர் கேள்வி கேட்டார்.

உடனே தனது பகட்டான ஆடைகளைத் துறந்த அறிஞர் தொடர்ந்து பயணப்பட்டார்

அடுத்து ஒரு ஜென் துறவியை சந்தித்தார். அவரிடமும் அதே கேள்வியைக் கேட்டார்.

“காலையில் என்ன சாப்பிட்டாய்?” என்று அந்தத் துறவி கேட்டார்.

அவர் சாப்பிட்ட பொருள்களையெல்லாம் வரிசையாகக் கூறினார்.

அதைக் கேட்ட துறவி, “இப்படிச் சாப்பிட்டால் எப்படி உண்மையான ஞானம் கிடைக்கும். இனிமேல் தினமும் பிச்சை எடுத்துத்தான் சாப்பிட வேண்டும். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு கைப்பிடிதான் சாப்பிட வேண்டும்” என்று கூறிய துறவி தன் வழியில் சென்றார்.

அதையும் விடாமல் கடைப்பிடித்தபடி தன் பயணத்தைத் தொடர்ந்தார் அறிஞர்.

அவர் சந்தித்த ஒவ்வொரு துறவியும் தங்களுக்குத் தெரிந்த ஒவ்வொரு விஷயத்தைப் பற்றிக் கூறினார்கள்.

அவற்றை ஒன்று விடாமல் கடைப்பிடிக்க ஆரம்பித்தார். தாடி வளர்த்தார். ஒரு கட்டத்தில் உலக சுகங்களையெல்லாம் துறந்த பிறகும் கூட அவருக்கு ஞானம் கிடைத்த பாடில்லை.

ஒரு மரத்தடியில் இளைப்பாற அமர்ந்தபோது தன் நிலையை நினைத்து அவருக்கே பரிதாபமாக இருந்தது. வாய்விட்டுப் புலம்பினார்.

அருகில் அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு துறவி, "ஆடையைத் துறந்தாய், சாப்பாட்டைத் துறந்தாய், இன்னும் என்ன வெல்லாமோ துறந்தாய். ஆனால் நீ ஞானத்தைத் தேடுகிறோம் என்ற எண்ணத்தைத் துறக்கவில்லையே, முதலில் தேடுவதை நிறுத்து. ஞானம் தானாகக் கிடைக்கும்" என்றார்.

மனம் கழிந்து நான் அழிந்த நிலையே ஞானம் – திருவாசகம்.

"வான் கெட்டு மாருதம்மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்
தான்கெட்டல் இன்றிச் சலிப்புஅறியா தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ."
(திருவாசகம் பா.252)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 24. நீர்மல்க தெள்ளேணம் கொட்டாமோ?
### (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் துறவி ஒருவர் ஆற்றில் மூழ்கி தவம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு இளைஞன் குறுக்கிட்டு "ஐயா நான் தங்களின் சீடனாக சேர விரும்புகிறேன்" என்றான்.

ஆற்றிலிருந்து எழுந்தவர், “ஏன்?” என்றார் துறவி.

“நான் கடவுளை அறிய விரும்புகிறேன்” என்றான்.

சட்டென்று துறவி அவன் கழுத்தின் பின்புறத்தைப் பிடித்து இழுத்து, அவன் தலையை ஆற்றினுள் முக்கினார்.

சிறிது நேரத்தில் மூச்சிறைத்த இளைஞன், திமுறிக் கொண்டு வெளியே வரத் துடித்தான்.

கடைசியாக துறவி அவனைப் பிடித்து வெளியே இழுத்தார்.

வெளியில் வந்த இளைஞன் இருமிக் கொண்டு பெரு மூச்செறிந்தான்.

துறவி கேட்டார், நீ நீரினுள் மூழ்கி இருக்கும் போது உனக்கு என்ன தேவைப் பட்டது?” என்றார்.

“காற்று” என்றான் இளைஞன்.

“நல்லது, வீட்டுக்குச் செல். காற்று போல கடவுள் உனக்கு எப்போது தேவையோ அப்போது திரும்பி வா” என்று சொல்லி விட்டார்.

“கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் அனைவளைத் தோளியொடும் புகுத்தருளி
நனவே எனைப்பிடித்து ஆட்கொண்டவா நயந்து நெஞ்சம்
சினவேல்கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ.” (திருவாசகம் பா.244)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 25. பிண நெஞ்சே!

(ஜென்னும் திருவாசகமும்)

ஜென் மார்க்கம் என்ன?

ஜென் துறவியான ஜோஷு, தனது 60 வது வயதில் ஜென் மார்க்கம் குறித்து கற்க ஆரம்பித்தார். ஜென் மார்க்கம் என்ன?

தனது 80 வது வயது வரையிலும் ஜென்னை அவர் கற்றார்.

அப்போதுதான் அவரால் முழுமையாக ஜென் போதனைகளை கற்றுத் தேற முடிந்தது.

அதன் பிறகு தனது 130 வயது வரையில் அவர் ஜென் போதனைகளை மற்றவர்களுக்கு கற்று கொடுத்தார்.

ஒரு நாள் அவரது மாணவர் ஒருவர், எனது மனதை காலியாக வைத்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்.

அதற்கு ஜோஷு, அதை வெளியே கொட்டி விடு என்றார். இதைக் கேட்ட அந்த மாணவர், எனது மனதில்தான் எதுவும் இல்லையே, பிறகு எப்படி நான் கொட்டுவது என்று கேட்டார்.

அதற்கு ஜோஷு புன்னகையுடன், அப்படியானால் அதை வைத்துக் கொள் என்றார்.

## மனதின் செயல்கள் – திருவாசகம்

"அறிவ லாத எனைப்புகுந்து
    ஆண்டுகோண்டு அறிவதை அருளிமேல்
நெறிஎ லாம்புலம் ஆக்கிய
    எந்தையைப் பந்தனை அறுப்பானைப்
பிறிவலாத இன்னருளகள் பெற்று
    இருந்தும் மாறாடுதி பிணநெஞ்சே
சிறியெலாம் மிகக்கீழ்ப் படுத்தாய்
    கெடுத்தாய் என்னைக் கெடுமாறே" (திருவாசகம் பா.36)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 26. யார் பெற முடியும்?

## (ஜென்னும் திருவாசகமும்)

ஜென் துறவி ஒருவர் குடிசை ஒன்றில் தங்கி இருந்தார்.

வழக்கம் போல அவர் சமைத்துக் கொண்டிருந்தார்.

அடுப்பில் இருந்த நெருப்புப் பொறி ஒன்று கூரையில் பட்டது.

கூரை திகு திகுவென்று தீப்பிடித்து எரியத் தொடங்கியது.

குடிசை எரிவதைப் பார்த்து அக்கம் பாக்கத்தில் இருந்தவர்கள் அங்கே ஓடி வந்தார்கள்...

அவர்களின் முயற்சியால் தீ அணைக்கப்பட்டது.

இருந்தும் குடிசை எரிந்து சாம்பலாகி விட்டது.

துறவியின் குடிசை சாம்பலாகி விட்டதே என்று அவர்கள் வருந்தினார்கள்.

“எல்லோர்க்கும் நல்லது செய்பவர் நீங்கள். உங்களுக்கு இப்படிப்பட்ட இழப்பு வந்திருக்கக் கூடாது என்றார்கள்.

புன்முறுவல் பூத்த துறவி “எனக்கு இழப்பு ஏற்பட்டதாக ஏன் நினைக்கிறீர்கள்?

இத்தனை நாட்களாக நிலவைப் பார்க்க முடியாமல் குடிசையின் கூரை மறைத்து இருந்தது. இனி நான் முழுமையாக நிலவைப் பார்த்து மகிழ்வேன்” என்றார்.

“பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்

உய்ஞ்சேன்நான் அடையானே அடியேனை வருகஎன்று
அஞ்சேல்என்று அருளியவாறு ஆர்பெறவார் அச்சோவே."
(திருவாசகம் பா.654)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 27.மன அமைதி பெற

### (ஜென்னும் திருவாசகமும்)

ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணப் பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு ஏரியை எதிர் கொண்டபோது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரும் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள்.

புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர் கொண்டு வரச் சொன்னார்.

சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக் கொண்டு நீர் நிலையை நோக்கி நடந்தார்.

அந்த நேரத்தில், மாட்டு வண்டிக்காரர் ஒருவர், ஏரிக்குள் இறங்கி ஏரியைக் கடந்து சென்றார். ஏரி கலங்கி விட்டது.

அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப் படுத்தி பார்ப்பதற்கே உபயோக மற்றதாகக் காட்சியளித்தது.

இந்தக் கலங்கிய நீர் எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டு போய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார்.

அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித்தார்.

ஒரு மணி நேரம் சென்ற பிறகு, புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்று வரப் பணித்தார்.

நீர் நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது. சகதி நீரின் அடியிற்சென்று பதிந்திருந்தது.

ஒரு பானையின் தண்ணீரை முகர்ந்து கொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான். புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார்.

பிறகு மெல்லிய குரலில் சொல்லலானார்.

தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்?

நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று!

நீ அதை அதன் போக்கிலேயே விட்டாய். அது தானாகவே சுத்தமாயிற்று. அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா?

ஆமாம் சுவாமி!

நம் மனமும் அப்படிப்பட்டதுதான்..

மனம் குழப்பத்தில் இருக்கும்போது நாம் ஒன்றும் செய்ய வேண்டாம். அதை அப்படியே விட்டு விட வேண்டும்.

சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். அது தனக்குத்தானே சரியாகிவிடும். நாம் எந்தவித முயற்சியும் செய்ய வேண்டாம்.

மனதை சமாதானப் படுத்தும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும் வேண்டாம். அது அமைதியாகிவிடும். அது தன்னிச்சையாக நடக்கும். அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும்.

மன அமைதி என்பது இயலாத செயல் அல்ல!
இயலும் செயலே! அதற்கு நம் பங்கு எதுவும் தேவை இல்லை

மனமயக்கமற்று அமைதி பெற – திருவாசகம்

“கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந்து ஆண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும்மாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்மாண்டு என்னுடைய
செயல்மாண்ட வாபாடித்த தெள்ளேணம் கொட்டாமோ.”
(திருவாசகம் பா.245)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 28. மனோதிடம் வேண்டும்

(ஜென்னும் திருவாசகமும்)

“ஜென் துறவி பென்கேயிடம் படித்த சீடன் ஒருவன் தற்காப்புக் கலையில் மிகவும் ஆர்வம் உள்ளவன்.

இளைஞான சீடன் தன்னுடைய ஆசிரியருடைய மனோதிடத்தை சோதித்து பாாத்து விடுவது என முடிவெடுத்தான்.

ஒரு நாள் புத்த பிட்சுகள் வைத்து இருக்கும் ருத்திராச்சை போன்ற மணிமாலையை உருட்டிக் கொண்டே தியானத்தில் அமர்ந்து இருந்த ஆசிரியரைப் பார்த்தான். ஈட்டியை எடுத்து வேகமாக ஆசிரியரை நோக்கி எரிந்தான்.

ஜென் ஆசிரியர் ஈட்டியின் குறியிலிருந்த இலாவகமாக விலகி தன் கையிலிருந்த மணி மாலையால் தட்டி விட்டார்.

அதன் பிறகு, சீடனைப் பார்த்து புன்னகையுடன் "உனது ஈட்டி வீச்சு இன்னும் முதிர்ச்சி பெறவில்லை. ஈட்டி நகர்வதற்கு முன்பே உன்னுடைய மனம் நகர்ந்து விட்டது" என்றார்.

### சிவபோதம் ஒழிந்த நிலை - திருவாசகம்

"மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானம் தொழும்தென்னன் வார்கழலே நினைந்து அடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின்று ஆடாமோ தோதள்நோக்கம்".
(திருவாசகம் பா.)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 29.அச்சத்திற்கு என்ன காரணம்?

(ஜென்னும் திருவாசகமும்)

அச்சத்திற்கு என்ன காரணம்? என்பதை விளக்க ஜென் குரு தனது சீடர்களுக்கு ஒரு கதை சொன்னார்.

ஒரு நாட்டின் படைத் தலைவருக்கு அரசன் விலை உயர்ந்த பளிங்குக் கோப்பை ஒன்றைப் பரிசாகத் தந்தான்.

பரிசாகக் கிடைத்த கோப்பையைப் பார்த்துப் பெருமிதம் கொண்டார் அவர். மேசையின் மேல் கோப்பையை வைத்துச் சிறிது தொலைவில் நின்று அதன் அழகைப் பார்த்தார்.




அருகே வந்து அந்தக் கோப்பையைப் பார்த்தார். அன்புடன் அதைத் தடவிக் கொடுத்தார்.

கோப்பையைக் கையில் எடுத்தார். அதை மேலே தூக்கிப் போட்டு விளையாட்டாகப் பிடித்துக் கொண்டிருந்தார்.

அப்படித் தூக்கிப் போடும் போது அவர் யைில் இருந்து நழுவியது கோப்பை. கீழே விழுந்து உடைந்து விடுமோ என்று பதறினார் அவர்.

கோப்பை தரையில் விழுவதற்கு முன் முயற்சி செய்து பிடித்துக் கொண்டார்.

போர்க்களத்தில் எத்தனையோ வீரர்கள் என்னைச் சூழ்ந்தபோதும் நான் அச்சம் கொண்டது இல்லை. அவர்களுடன் வீரத்துடன் போர் செய்தேன்.

இந்தக் கோப்பை கீழே விழுந்து நொறுங்கி விடும் என்ற அச்சம் எதனால் ஏற்பட்டது என்று சிந்தித்தார்.

கோப்பையின் மீது கொண்ட பற்றே காரணம் என்பது அவருக்குப் புரிந்தது.

அன்றே அந்தக் கோப்பையை உடைத்து எறிந்தார்.

## அஞ்சேன் அஞ்சேன் அஞ்சேன் - திருவாசகம்

“புற்றில் வாழ் அரவும் அஞ்சேன்
பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
கற்றை வார் சடைஎம் அண்ணல்
கண் நுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வம் தன்னை
உண்டு என நினைந்து எம் பெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால்

அம்ம நாம் அஞ்சு மாறே." (திருவாசக. பா.516)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 30.மனம் உருகி தொண்டு செய்வோம்!
## (ஜென்னும் திருவாசகமும்)

ஜப்பானை சேர்ந்த ஜென் குரு டெட்சாகன் புத்த மத சூத்திரங்கள் அனைத்தும் சீன மொழியில் உள்ளன. அவற்றை ஜப்பானிய மொழியில் வெளியிட வேண்டும் என்று நினைத்தார்.

அந்த காலத்தில் நூல் வெளியிடுவது பெரிய முயற்சியாக இருந்தது.

அதற்காக பலரிடம் நன்கொடை கேட்டார். சிறிய தொகை கொடுத்தாலும் பெரிய தொகை கொடுத்தாலும் மகிழச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

நன்கொடை தந்தவர்களிடம் எந்த வேறுபாடும் காட்டவில்லை.

ஐந்து ஆண்டுகள் கழிந்தன. போதுமான பணம் சேர்ந்ததை அறிந்தார் அவர்.

அப்போது அந்த நாட்டில் பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. மக்கள் சொல்ல முடியாத துன்பத்திற்கு ஆளானார்கள்.

திரட்டிய செல்வத்தை எல்லாம் மக்களின் துயரத்தைப் போக்கச் செலவு செய்தார்.

மீண்டும் பணம் திரட்டத் தொடங்கினார். ஐந்து ஆண்டுகளில் ஓரளவு தொகை சேர்ந்தது.

அப்போது அந்த நாட்டைத் தொற்று நோய் ஒன்று தாக்கத் தொடங்கியது. பலர் இறந்து போனார்கள். தான் சேர்த்து வைத்த தொகையை மக்களுக்குச் செலவு செய்தார்.

மூன்றாம் முறையாகப் பணம் திரட்டத் தொடங்கினார். ஐந்து ஆண்டுகளில் போதுமான தொகை சேர்ந்தது.

இந்த முறை அவர் எண்ணம் நிறைவேறியது. புத்த சூத்திரங்களை ஜப்பானிய மொழியில் வெளியிட்டார்.

ஜப்பானிய மக்கள் தங்கள் குழந்தைகளிடம் "துறவி டெட்சாகன் மூன்று முறை புத்த சூத்திரங்களை நூலாக வெளியிட்டார். முதல் இரண்டு நூல்களும் கண்ணுக்குத் தெரியாதவை. மூன்றாவது நூலைவிட அவை இரண்டும் சிறந்தவை" என்றார்கள்.

மனம் உருகி தொண்டு செய்வோம் – திருவாசகம்

"அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட்டு உலகம் எல்லாம்
சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ."
(திருவாசகம் பா.237)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 31.புத்தர் எழுப்பிய கேள்விகள்

(ஜென்னும் திருவாசகமும்)

அந்த ஜென் குரு அவ்வப்போது தனது மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் மிகவும் சுருக்கமாக, எளிய முறையில் பதில் சொல்வது வழக்கம்.

அவ்வப்போது சீடர்கள் கேள்விகள் கேட்பதும் அவர் பதில்

சொல்வதும் தொடரும்.

சீடர்களில், ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஏதாவது சந்தேகம் தோன்றிக் கொண்டே இருக்கும். அதை அவர் தீர்த்து வைப்பார்.

ஒரு சீடர், “குருவே புத்தர் ஏன் கடவுளைப் பற்றி எதுவும் பேசவில்லை” என்று கேட்டார்.


“ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.” (திருவாசகம் பா.235)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 32.புத்தரின் மகாசமாதி
### (ஜென்னும் திருவாசகமும்)

புத்தர் தன் கடைசி நேரத்தில் கூறினார்.

என் உடலை இயற்கைக்கு மீண்டும் ஒப்படைக்கப் போகிறேன். நான் அனேக உடல்களை பயன்படுத்தி உள்ளேன்.




ஆனால் இதற்கு முன்பு இயற்கைக்கு நன்றி சொல்லியது இல்லை இதுதான் கடைசி.

இனி நான் உடலுக்குள் புக மாட்டேன். இதுதான் நான் வாழ்கின்ற கடைசி வீடு கடைசி இருப்பிடம்.

நான் என் உடலைத் திருப்பித் தர வேண்டும்.

இது அனேக வேலைகளைச் செய்து விட்டது.

இது என்னை ஞானத்திற்கு இட்டுச் சென்றது.
இது நல்ல சாதனமாக இருந்தது.
இது எல்லா வகையிலும் எனக்கு உதவியாக இருந்தது.

ஆகவே இயற்கைக்கு நன்றி சொல்லி விட்டு
இந்த வீட்டை திருப்பி கொடுக்க வேண்டும்.

ஏனெனில்

இந்த உடல் இயற்கை எனக்கு கொடுத்த வெகுமதி.
நான் முழு உணர்வுடன் இதைக் கொடுக்க வேண்டும்.

அதன் பிறகு அவர் தன் உடலை ஒப்படைத்தார்.
அவர் உடலைச் சுற்றி ஒரு ஒளி இருந்தது.
அவர் உடல் சக்தியாக மாறி இந்தப் பிரபஞ்சத்துடன் கலந்து விட்டது.

அவருடைய மரணம் உள்ளுணர்வுடன் கூடிய மரணம்.
பிறகு அவர் தனது மனதை ஒப்படைத்தார்.
அப்பொழுது நறுமணம் பரவியது.
புத்தரின் மனம் ஒரு நறுமணம்தான்.
கள்ளங் கபடமற்ற தூய்மையான வாழ்க்கையின் நறுமணம்.
பிறகு அவர் தன் ஆன்மாவை ஒப்படைத்தார்.

இந்த மூன்று விஷயங்களும் ஒப்படைக்கப் பட்ட பின்னரே அவர் இறந்தார்.
இதுதான் மகா பரி நிர்வாணம்
இதுதான் மகாசமாதி. வீடுபேறு

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்

சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.
(திருவாசகம் பா.235)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

# YOUTUBE LINKS

1. வேண்டத்தக்கது அறிவோய் நீ! https://youtu.be/VrsW3Ac1jyA
2. புத்த தத்துவமும் திருவாசகமும் ஒரே வரியில்
3. ஞானமடைந்த மனிதன் https://youtu.be/8LdwpE7g3vw
4. மன்னரோடு உறவும் அஞ்சேன் https://youtu.be/Ser88aXh1wI
5. பேரின்பத்தில் திளைப்பேன் https://youtu.be/sl4ptyno-kA
6. ஞானம் பெற்ற பின் https://youtu.be/ITfSUVmmL1w
7. ஞானம் பெறும் ஆர்வம் https://youtu.be/tZYFjRr2hmQ
8. உறக்கத்திலிருந்து எழுந்தால் ஆன்மீக முன்னேற்றம்? https://youtu.be/PivUzEgBQnI
9. ஞானவாள் ஏந்துவோம் https://youtu.be/YvtiTRR8468
10. அன்பு வழியில் https://youtu.be/PjQq7IvT3K4
11. வேண்டேன் செல்வம் https://youtu.be/D0DT0Dbq8LY
12. மகிழ்ச்சியின் இரகசியம் https://youtu.be/3JqntRgO8eI
13. ஞானநிலைகள் https://youtu.be/2A1saU468EY
14. ஒரு ஆசை ஒரு பாடம் https://youtu.be/idG20zJAXR4
15. பேரலைகள் https://youtu.be/1SoMjqh-_sc
16. நானார்என் உள்ளமார்? https://youtu.be/w0rEbOMkjIM
17. ஞானோதயத்தின் கதை https://youtu.be/W07Vrzl-C-8
18. பழுத்த ஞானம் https://youtu.be/rTNbrMHrMhI
19. அன்பின் செயல் https://youtu.be/3IL2V5GQ-Hs
20. ஞானிகளின் சிறப்பு https://youtu.be/xdBDnth_cxo
21. எது அதிசியம்? https://youtu.be/EZ5nwjCrW6o

22. மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம் https://youtu.be/nQQLFk2wqMc
23. ஞானம் என்றால் https://youtu.be/bBkUW02iCT4
24. நீர்மல்க தெள்ளேணம் கொட்டாமோ? https://youtu.be/W07Vrzl-C-8
25. பிண நெஞ்சே! https://youtu.be/TuSWypDh0ks
26. யார் பெற முடியும்? https://youtu.be/um6Iye4s83A
27. மன அமைதி பெற https://youtu.be/LFMaetD3H40
28. மனோதிடம் வேண்டும் https://youtu.be/Dx5QI3LVxkE
29. அச்சத்திற்கு என்ன காரணம்? https://youtu.be/KnUiLcNRU3o
30. மனம் உருகி தொண்டு செய்வோம்! https://youtu.be/vjya3afsNg0
31. புத்தர் எழுப்பிய கேள்விகள் https://youtu.be/wm4HM4r76I
32. புத்தரின் மகாசமாதி https://youtu.be/B86vYrIgGVY

## துணைநின்ற நூல்கள்


1.திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2.திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3.ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
4.மாணிக்கவாசகர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
5.ஞானம் தரும் ஜென் கதைகள், அம்பிகா சிவம், கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
6.100 ஜென் கதைகள், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை
7.ஜென் கதைகள், எ.ஜோதி, நன்மொழிப் பதிப்பகம், சென்னை.
8.Zen Stick – karn Rahul - Kindly Store
9.Tanya"s Collection Of Zen Stories – Schmid Tanya
10.வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
11.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
12.இணையதள தகவல்கள்

# பானுகுமார் படைப்புலகம்

(164 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)

5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்

9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்

13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.

10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே

2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 125 தலைப்புகளில் vethathiriam Banukumar vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்

32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5

67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்

102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?
120.வேதாத்திரியம் மானுட வேதம்
121. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
122. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்
123.வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்
124. மனவளக்கலையின் மகத்துவம்
125 அருட்தந்தையே நீ ஒரு அற்புதம்